# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண். 207/ந/2025, நாள் 11.03.2026**

M. தனசேகரன்,
தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
தேவகோட்டை நகராட்சி, சிவகங்கை மாவட்டம் – எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, ராம் நகர், பர்மா காலனி, தாணிச்சா ஊரணி ரோடு, எண். 75/1A, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. தனசேகரன் என்பவரது 02.06.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.06.2025 அன்று பெறப்பட்டு, 207/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை, ராம் நகர், பர்மா காலனி, தாணிச்சா ஊரணி ரோடு, எண். 75/1A, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. தனசேகரன் என்பவரின் 02.06.2025 நாளிட்ட முறையீட்டு மனுவுடன் இணைத்தனுப்பப்பட்டுள்ள 10.05.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"I am the complainant herein as such I am well acquainted with the facts and circumstances of the case herein. I am the EEE holdler. As such, I was qualified as a valid Tenderer and I used to take the tender right from 1996 to 2015 under the above Respondents as I was one of the Tenderers and it is crystal clear that after taking the works under the Tender and finished the same, out of total amount of tender bill, tender amount had been released after deducting the Security Deposit amount such as EMD (Earnest Money Deposit), FSD (Further Security Deposit) and AFSD (Additional Further Security Deposit) amount at 1% + 1% + 5%. It is pertinent to note here that even after auditing my account there was no objection had been given to releae the deposited amount by the concern Authority under the Respondents. To my shock, though I requested several times to release the Security Deposit amounts such as EMD, FSD and AFSD, no amount has been released so far, It is crystal clear that so far it was accumulated more than about 3 lakhs in their register. To my shock, though I requested the Respondents several times to releae the same, no amount was releaed by the Respondents till date. Hence I am before this Hon'ble Ombudsman.

It is therefore, prayed that this Hon'ble Ombudsman may be pleased to pass the order for release of security deposit amounts deposited such as EMD, FSD and AFSD to the complainant and thus render justice".என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையினை அனுப்பக்கோரி தேவகோட்டை நகராட்சி ஆணையருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 20.06.2025 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) தேவகோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை கடிதம் ந.க.எண்.1136/2025/இ1, நாள் 17.12.2025 –ன் அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

"மனுதாரர் திரு. எம். தனசேகரன் என்பவர் தேவகோட்டை நகராட்சியில் ஒப்பந்ததாரராக மேற்கொண்ட பணிகளுக்கு 2008ம் ஆண்டு முதல் 2015 வரை உள்ள காலங்களில் தனது பெயரில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். அரசாணை எண். (G.O.Ms.No.621) உள்ளாட்சித் துறை, நாள் 08.04.1980ன்படி, மேற்படி தொகையில் 2008 முதல் 2010 வரை தொகை கீழ்கண்ட விபரப்படி அன்னாரது பெயரில் உள்ளது.

| வரிசை எண். | வருடம் | பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2008 | திரு. எம். தனசேகரன், ஒப்பந்ததாரர் | 100 |
| 2 | 2009 | | 4273 |
| 3 | 2010 | | 13622 |
| | | மொத்தம் | 17995 |

மேற்கண்ட தொகை ரூ.17,995/– மட்டுமே உள்ளது. அத்தொகை நகராட்சி வருவாய் நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அன்னாரது பெயரில் இருந்த தொகை அரசாணை எண். (G.O M.S. No. 621), உள்ளாட்சி துறை, நாள் 08.04.1980–ன்படி முன்வைப்புத் தொகையானது 12 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும், அரசாணையில் தெரிவித்துள்ளபடி 9ஆண்டுகளுக்கு மேலானவைகள் காலாவதியானவை என கருதப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர் திரு. எம். தனசேகரன் 2011ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டு வரை உள்ள பிடித்த வைப்புத் தொகையின் விபரம் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும், வைப்புத் தொகை திரு. எம். தனசேகரன் என்பவர் பெயரில் வைப்புத் தொகை ரூ.56,359/- மட்டுமே கீழ்கண்ட விபரப்படி உள்ளது.

| வரிசை எண். | வருடம் | பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2011 | திரு. எம். தனசேகரன், ஒப்பந்ததாரர் | 400 |
| 2 | 2012 | | 3343 |
| 3 | 2013 | | 22701 |
| 4 | 2014 | | 18660 |
| 5 | 2015 | | 11255 |
| | | மொத்தம் | 56359 |

மேலும், மேற்படி வைப்புத் தொகையானது காலாவதியாகி விட்டதாலும், மேற்படி தொகையானது வருவாய் நிதியில் வரவு எடுக்காமல் முன்பண பதிவேட்டில் இருப்பாக உள்ளதால், மேற்படி 2011ம் ஆண்டு முதல் 2015 வரை உள்ள வைப்பு தொகை ரூ.56,359/- மனுதாரர் திரு. எம். தனசேகரன் என்பவருக்கு திரும்ப வழங்க நகர்மன்றத்தின் அனுமதி பெற்று

வழங்க அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், அதன் அடிப்படையில் நகர்மன்ற அனுமதி பெற்று அண்ணாருக்கு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரத்தினை மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்றம், சென்னை அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தேவகோட்டை நகராட்சி ஆணையர் ஆகியோரை 30.12.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 30.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"நான் 1996ம் ஆண்டு முதல் 2015 வரை தேவகோட்டை நகராட்சியில் ஒப்பந்ததாரராக இருந்து மேற்கொண்ட பணிகளுக்கு பிடித்தம் செய்யப்பட்ட காப்புறுதித் தொகை 1 சதவீத வைப்புத் தொகை மற்றும் 5 சதவீத வைப்புத் தொகை (EMD, FSD. AFSD) சுமார் ரூ.3.00 இலட்சம் தேவகோட்டை நகராட்சியால் வழங்கப்படாமல் உள்ளது. மேற்படி தொகைகளை எனக்கு வழங்ககோரி 2013ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக தேவகோட்டை நகராட்சியிடம் மனு செய்தும், நேரில் சென்று மனு அளித்தும் இதுநாள் வரை எனக்கு எவ்வித தகவலும் தெரிவிக்காமல், தொகை வழங்கப்படாமல் உள்ளது. எனக்கு சேரவேண்டிய மேற்படி தொகைகளை விரைந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள உதவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

6) தேவகோட்டை நகராட்சி ஆணையரின் 22.12.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண். 1136/2025/இ1–ல், 30.12.2025 அன்று மாநிலத் தேர்தல் ஆணையரால் நடத்தப்படும் ஆய்வு கூட்டத்தில் இராமநாதபுரம் மற்றும் தேவகோட்டை நகராட்சிகள் சார்பாக கலந்துகொள்ள வேண்டியுள்ளதால், 30.12.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நகராட்சி வருவாய் உதவியாளர் திரு. பா. பழனியப்பன் என்பவர் ஆஜராகி விளக்கம் அளிக்க அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதின்படி, நகராட்சி வருவாய் உதவியாளர்திரு. பா. பழனியப்பன் என்பவர் 30.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரருக்கு நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் வைப்புத்தொகையாக 2008 முதல் 2010 வரை ரூ.17,995/– (ரூபாய் பதினேழாயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்று ஐந்து மட்டும்) வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி வைப்புத்தொகை 9 ஆண்டுகளுக்கு மேலாக மனுதாரருக்கு வழங்கப்படாமல் இருந்ததால் அரசாணை எண்.G.O.Ms.No.621, உள்ளாட்சித் துறை, நாள் 08.04.1980ன்படி இத்தொகை காலாவதியானதாக கருதி நகராட்சி வருவாய் நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

மேலும், 2011 முதல் 2015 வரை வழங்கப்பட வேண்டிய வைப்புத் தொகை ரூ.56359/– (ரூபாய் ஐம்பத்தாறாயிரத்து முன்னூற்றி ஐம்பத்தி ஒன்பது மட்டும்) மனுதாரருக்கு வழங்கும் பொருட்டு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விவரம் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி 2008 முதல் 2010 வரை உள்ள வைப்புத் தொகை ரூ.17995/– மற்றும் 2011 முதல் 2015 வரை உள்ள வைப்புத்தொகை ஆக மொத்தம் ரூ.74,354/– (ரூபாய் எழுபத்தி நான்காயிரத்து முன்னூற்றி ஐம்பத்தி நான்கு மட்டும்) மனுதாரருக்கு தேவகோட்டை நகராட்சியில் இருந்து வழங்கப்பட வேண்டியுள்ளது என்பதையும், மேற்படி தொகையினை நகராட்சியால் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மனுதாரர் தனக்கு சுமார் ரூ.3 லட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) வைப்புத் தொகை வழங்கப்பட வேண்டுமென விசாரணையில் தெரிவித்தார். மேற்படித் தொகை விபரம் எனக்கு தெரியாது. மேலும், விசாரணை அலுவலர் தெரிவித்தவாறு மனுதாரரை நேரடியாக அழைத்து மேற்படி தொகையினை ஒத்திசைவு செய்து அடுத்த

விசாரணையில் மேற்படி தொகை சம்மந்தமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் குறித்து மேலும் சில கூடுதல் விவரங்கள் தேவைப்பட்டதை தொடர்ந்து 20.01.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தேவகோட்டை நகராட்சி ஆணையர் ஆகியோரை ஆஜராகுமாறு 30.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. எதிர்மனுதாரரான தேவகோட்டை நகராட்சி ஆணையரின் 19.01.20206 நாளிட்ட கடிதம் ந.க. எண். 1136/2025/இ1-ல் 20.01.2026 அன்று தேர்தல் பணி (SIR) தொடர்பான ஆய்வுக்கூட்டம் மற்றும் வாக்காளர்களின் விசாரணை நடைபெறுவதால், மேற்படி விசாரணையை 23.01.2026 அன்றய தேதிக்கு மாற்றித் தர கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தேவகோட்டை நகராட்சி ஆணையர் ஆகியோரை 23.01.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

8) மனுதாரர் 23.1.2026 அன்று நடைப்பெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

"நான் 1996ம் ஆண்டு முதல் 2015 வரை தேவகோட்டை நகராட்சியில் ஒப்பந்ததாரராக இருந்து மேற்கொண்ட பணிகளுக்கு பிடித்தம் செய்யப்பட்ட காப்புறுதித் தொகை, 1 சதவீத வைப்புத் தொகை மற்றும் 5 சதவீத வைப்புத் தொகை (EMD, FSD, AFSD) ரூ.2,86,604/– (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பத்தாறாயிரத்து அறுநூற்றி நான்கு மட்டும்) தேவகோட்டை நகராட்சியால் வழங்கப்படாமல் உள்ளது. மேற்படி எனக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத்தொகையில் ரூ.53,523/– (ரூபாய் ஐம்பத்தி மூன்றாயிரத்து ஐநூற்றி இருபத்தி மூன்று மட்டும்) கனரா வங்கி, தேவகோட்டை கிளையின் காசோலை எண்.177538, நாள் 07.01.2026 ஆனது பதிவு அஞ்சல் மூலம் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டதை, நான் பெற்றுக்கொண்டேன். மீதமுள்ள தொகை சுமாராக ரூ.2,33,081/– (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பத்தி மூன்றாயிரத்து எண்பத்தி ஒன்று மட்டும்) எனக்கு தேவகோட்டை நகராட்சியிலிருந்து வரவேண்டியுள்ளது. மேற்படித் தொகையினை விரைவில் தேவகோட்டை நகராட்சி வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

9) எதிர்மனுதாரரான தேவகோட்டை நகராட்சி ஆணையர் திருமதி அஜிதா பர்வின் என்பவர் 23.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"தேவகோட்டை நகராட்சியில் 2011ம் ஆண்டிலிருந்து உள்ள கணக்குகளின் விவரப்படி மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையில் ரூ.53,523/– (ரூபாய் ஐம்பத்து மூன்றாயிரத்து ஐநூற்றி இருபத்தி மூன்று மட்டும்) கனரா வங்கி, தேவகோட்டை கிளை காசோலை எண்.177538, 07.01.2026 நாளிட்டு பதிவு அஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத்தொகை ரூ.61,532/– (ரூபாய் அறுபத்தி ஒராயிரத்து ஐநூற்றி முப்பத்தி இரண்டு மட்டும்) அரசாணை எண்.62, உள்ளாட்சித் துறை நாள் 08.04.1980ன்படி, அத்தொகையினை வழங்குவதற்கு நகர்மன்றத்தில் பொருள் வைத்து விரைவில் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

2011ம் ஆண்டிலிருந்து ஒப்பந்த பதிவேடுகளில் உள்ள கணக்குகளையும் ஒத்திசைவு செய்வதற்கு சுமார் 15 நாட்கள் கால அவகாசம் தேவைப்படுகிறது. எனவே மனுதாரருடன் நகராட்சி கணக்குகளை ஒத்திசைவு செய்ய 15 நாட்கள் கால அவகாசம் வழங்கும்படி மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக்கொள்கிறேன். ஒப்பந்ததாரருடன்

ஒத்திசைவு செய்த பின்னர் இம்முறைமன்ற நடுவத்திற்கு உரிய அறிக்கையினை சமர்ப்பிக்கிறேன் என்பதையும் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

10) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலங்கள் மற்றும் எதிர்மனுதாரரான தேவகோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம், நகராட்சி வருவாய் உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவைகள் தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

தேவகோட்டை நகராட்சியில் ஒப்பந்தப்பணிகள் மேற்கொண்ட வகையில் 1996 முதல் 2015 வரை பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை ரூ.2,86,604/– நிலுவையாக உள்ளது என்பதும், மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்ததை தொடர்ந்து 07.01.2026 அன்று ரூ.53,523/–க்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது என்பதும், மீதமுள்ள நிலுவைத் தொகை தேவக்கோட்டை நகராட்சியிலிருந்து பெற்றிட மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலங்களிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் 2008 முதல் 2015 வரை மேற்கொண்ட ஒப்பந்த பணிகளுக்கு பிடித்தம் செய்த வைப்புத் தொகை ரூ.17,995/–, 9 ஆண்டுகளுக்கு மேலானதால், அரசாணையின்படி அத்தொகை காலாவதியானதாக கருதப்பட்டு, நகராட்சி வருவாய் நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதும், 2011 முதல் உள்ள நகராட்சி கணக்குகளின்படி நிலுவைத்தொகையில் ரூ.53,523/– காசோலையாக 07.01.2026 அன்று வழங்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.61,532/– (ரூபாய் அறுபத்தி ஓராயிரத்து ஐநூற்றி முப்பத்தி இரண்டு மட்டும்) அரசாணை எண்.62, உள்ளாட்சித்துறை, நாள் 08.04.1980ன்படி வழங்குவதற்கு நகர்மன்றத்தில் பொருள் வைத்து விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், நிலுவைத்தொகை ஏதேனும் இருப்பின் 2011ம் ஆண்டு முதல் நகராட்சியில் உள்ள ஒப்பந்த பதிவேடுகளின்படி கணக்குகளை ஒத்திசைவு செய்து 15 நாட்களுக்குள் வழங்கப்படும் என்பதும் தேவகோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமுலம் மற்றும் நகராட்சி வருவாய் அலுவலரின் மூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், தேவகோட்டை நகராட்சி ஆணையரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, மனுதாரரிடமிருந்து ஒப்பந்த பணிகளுக்காக பிடித்தம் செய்யப்பட்டு நிலுவையாக உள்ள வைப்பு தொகையினை அரசாணையின்படி, நகர்மன்றத்தின் அனுமதி பெற்று விரைந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், நகராட்சியில் உள்ள ஒப்பந்த பதிவேடுகளை கொண்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள வைப்புத் தொகை நிலுவை குறித்து ஒத்திசைவு செய்து, நகராட்சிக்கு எவ்வகையிலும் நிதி இழப்பு ஏற்படாதவாறு, மேற்படி தொகை வழங்குவதில் தணிக்கை தடை ஏதேனும் உள்ளதா என்பதை பரிசீலித்து, அரசு விதிமுறைகளை பின்பற்றி நிலுவையாக உள்ள வைப்புத் தொகையினை மனுதாரருக்கு விரைந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இது குறித்த அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்திடுமாறும் தேவக்கோட்டை நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2026 ஆம் ஆண்டு, மார்ச்ச திங்கள் 11–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. M. தனசேகரன்
   எண். 75/1A, தாணிச்சா ஊரணி ரோடு,
   பர்மா காலனி, ராம் நகர், தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   தேவகோட்டை நகராட்சி,
   சிவகங்கை மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,எம்.ஆர்.சி.நகர்,
   சென்னை – 600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
   சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.